(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2 (6).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2011, சனவரி 21, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2011, பெப்புருவரி 08, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 (3), 14 மற்றும் 20 ஆம் பிரிவுகளின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2010, திசெம்பர் மாதம் 24 ஆம் திகதிய 1685/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2011.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2011, பெப்புருவரி 22, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0315/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கொழும்பில் 'ஐபா' நிகழ்ச்சியினை நடத்துவதற்கு இலங்கை இணங்கிய திகதியினையும்,

(ii) நிகழ்விற்கு நிதி வழங்கிய தரப்பினையும்,

(iii) பணம் பெறப்பட்ட திகதியினையும்,

(iv) மேலேயுள்ளவாறு பணம் செலுத்தப்படாவிட்டால், செலவினை ஏற்றுக் கொண்டவர் யார் என்பதனையும்,

(v) நிகழ்ச்சிக்கான மொத்தச் செலவினையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) (i) 'ஐபா' நிகழ்ச்சியினால் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளையும்,

(ii) அவ்வாறான நன்மைகள் கிடைத்ததா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0410/ '10

கௌரவ திலும் அமுனுகம,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் அரச சேவையிலிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) 2010 ஆண்டில் அரச சேவையிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) 2004 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலும் இந்த ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) இவ்வாறு அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0529/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், திருக்கொண்டுயாடுமடு - ஜயந்திபுர வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது என்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல், வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0545/ '10

கௌரவ சாந்த பண்டார,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 1948 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையிலான காலப்பகுதியினுள் இலங்கை விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்ட அந்த விளையாட்டு வீரர்களின் பெயர் பட்டியல் மற்றும் அந்த வீரர்கள் பெற்றுக்கொண்ட வெற்றிகள், அதனுடன் தொடர்பான வருடங்கள் என்பவற்றை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) எதிர்வரும் ஒலிம்பிக் போட்டி நடைபெறும் இடம் மற்றும் வருடம் யாதென்பதையும்,

(ii) அந்தப் போட்டிகளில் இலங்கையின் விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்கிறார்களா என்பதையும்,

(iii) அதன் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டம் என்ன என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0624/ '10

கௌரவ ஆர். யோகராஜன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கொழும்பு 12, ஹுசைனியா வீதி, இலக்கம் 45 இல் அமைந்துள்ள ஹமீட் அல் ஹுசைனியா கல்லூரியில் கடும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையில் அங்கீகரிக்கப்பட்ட சிங்கள, தமிழ் மொழி மூல ஆசிரிய ஆளணியை பாடவாரியாகவும்,

(ii) ஒவ்வொரு மொழி மூலத்திலும் பாடரீதியாக தற்போதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையையும்,

(iii) ஒவ்வொரு மொழி மூலத்திலும் பாடரீதியாக தற்போது காணப்படுகின்ற ஆசிரியர் பற்றாக்குறை எவ்வளவு என்பதையும்,

(iv) மேற்படி ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கையையும்,

(v) அந்நடவடிக்கைகள் எப்போது மேற்கொள்ளப்படுமென்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) ரோயல், ஆனந்த மற்றும் நாளந்த ஆகிய கல்லூரிகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்படி (இ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளில் மேலதிகமாக காணப்படுகின்ற ஆசிரியர்களது எண்ணிக்கையை போதனா மொழி ரீதியாகவும் பாடவாரியாகவும் யாதென்பதையும்,

(ii) ஹமீட் அல் ஹுசைனியா கல்லூரியில் தற்போது நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக மேலதிக ஆசிரியர்களை இப்பாடசாலைக்கு இடமாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0642/ '10

கௌரவ அஜித் குமார,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இவ்வாண்டினுள் தொழில்கள் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அதற்கான விளம்பரங்கள் வெளியிடப்பட்டு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) மேற்படி ஆட்சேர்ப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் மற்றும் நிறைவு செய்யப்படும் திகதிகள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி தொழில்கள் வழங்கும் வேலைத்திட்டத்திற்காக வரவு செலவுத் திட்ட மதிப்பீடு மூலம் ஒதுக்கீடு செய்வதற்கு எதிர்பார்க்கும் நிதி எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0708/ '10

கௌரவ துனேஷ் கங்கந்த,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2005 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஓகத்து மாதம் வரையிலான காலப்பகுதியில் கொரிய அரசினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திற்கும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கு நபரொருவர் பின்பற்ற வேண்டிய செயல் நடைமுறைகள் யாவையென்பதையும்,

(iii) அத்தொழில்களுக்காக சென்ற ஆட்களின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் வெவ்வோறக எவ்வளவென்பதையும்,

(iv) கொரிய தொழில் வாய்ப்புக்காக இருக்க வேண்டிய அடிப்படை தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஏற்கனவே வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்துகொண்டுள்ள கொரிய தொழில்வாய்ப்பு விண்ணப்பதாரி ஒருவரின் பதிவு செல்லுபடியாகும் கால எல்லை யாதென்பதையும்,

(ii) மேற்படி பதிவு இரத்தான தொழில் வாய்ப்பு விண்ணப்பதாரி ஒருவர் கொரியாவில் தொழிலொன்றை பெற்றுக்கொள்வதற்காக மீண்டும் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் யாவையென்பதையும்,

(iii) எதிர்காலத்தில் இதற்காக ஆட்களை தெரிவு செய்யும் போது ஏற்கனவே வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழில் வாய்ப்பு விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0731/ '10

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் III ஆம் வகுப்பு, IIஆம் தரத்திற்கான, வரி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, 2006 ஆம் ஆண்டில் நடைபெற்றது என்பதையும்,

(ii) மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய 16,000 விண்ணப்பதாரிகளில் ஏறத்தாழ 1,000 போர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர் என்பதையும்,

(iii) இவர்களில் 550 பேருக்கு, 2007 ஆம் ஆண்டு ஏப்பிரல் 01 ஆம் திகதி தொடக்கம் நியமனம் வழங்கப்பட்டது என்பதையும்,

(iv) மேற்படி நியமனம் பெற்றவர்களிடையே, இப்பரீட்சை தொடர்பாக, 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று பட்டப்படிப்புச் சான்றிதழைக் கொண்டிராதவர்களும் உள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வரி உத்தியோகத்தர்களுக்காக நியமனம் பெற்ற மேற்படி ஒவ்வொரு வேட்பாளரினதும் பெயர், விலாசம் மற்றும் பெற்ற புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(ii) 2006.12.08 ஆம் திகதி முற்பகல் 9.30 க்கு, நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய, ஜா - எல கிழக்கு, துடல்ல, 76/சீ எனும் இலக்கத்தில் வசிக்கும், திருமதி டபிள்யு.ஏ.எஸ்.எம். சொவிஸ் இப்பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0780/ '10

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தற்போது வெளிநாடுகளில் பணிபுரியும் திருமணமான இலங்கைப் பெண்களுடைய இந்நாட்டிலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இப்பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் நலனோம்புகைக்காக அரசு நடைமுறைப்படுத்தியுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் யாவையென்பதையும்,

(iii) அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு, அரசாங்கம் ஒருவருடத்திற்கு செலவு செய்யும் பணத்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0317/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டியதாக உள்ள மொத்த தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) இலங்கை மின்சார சபைக்கான பத்து பெரிய கடன்பட்டோரின் பெயர்களையும்,

(iii) உயர்ந்த கடன் காரணமாக CEB ஆல் பெறப்பட்ட கடன்களுக்காக செலுத்த வேண்டிய வட்டியையும்,

(iv) இந்த நிலைமையை சமாளிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையையும்,

(v) கடன் கொடுத்தோருக்கு இலங்கை மின்சாரசபை செலுத்தவேண்டியுள்ள தொகையையும்,

(vi) இலங்கை மின்சார சபையின் மிகப்பெரிய கடன் கொடுத்தோர் பத்து பேரின் பெயர்களையும்,

(vii) கடந்த ஆறு வருடங்களாக அப்பணம் செலுத்தப்பட வேண்டிய திகதிகளையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இலங்கை மின்சாரசபையின் செயல்திறன் இன்மையும், அதன் உயர்ந்தளவு கடன்களுமே உயர்ந்த மின்கட்டணங்களுக்கும் எரிபொருள் விலைகளுக்குமான காரணங்களாகும் என்பது சரியானதா?

(இ) (i) இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் மீது ச.நா.நி இனால் பிரகடனப்படுத்தப்பட்ட நிபந்தனைகளையும்,

(ii) அந் நிபந்தனைகளை இலங்கை மின்சாரசபையும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் நிறைவேற்றப் போகின்றனவா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0575/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசாங்கப் பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற தொண்டர் ஆசிரியர்களின் எண்ணிக்கை பாடசாலை வகைப்படுத்தலுக்கிணங்க தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கான ஏதேனும் வேலைத்திட்டம் அமுலாக்கப்படுகின்றதா என்பதையும்,

(iii) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் இதற்காக பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கல்வியமைச்சின் சுற்றறிக்கை 2008/50 பகுதி 2 இன் (vi) வது பிரிவில் அடங்குகின்ற தொண்டர் ஆசிரியர்கள் இதுவரை நிரந்தர சேவையில் அமர்த்தப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(இ) ஆமெனில், இவர்களை சேவையில் நிரந்தரமாக்கல் சம்பந்தமாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0781/ '10

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தற்போது கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் முப்படை, பொலிஸ், பொலிஸ் அதிரடிப்படை மற்றும் சிவில் பாதுகாப்பு சேவைகளில் ஈடுபட்டிருக்கையில் தமது கணவர்மாரை இழந்த பெண்களின் எண்ணிக்கை, மாவட்ட ரீதியில் வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) மேற்படி விதவைப் பெண்களுக்காக அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள நலன்புரிச் சேவைகள் யாவையென்பதையும்,

(iii) அவர்களது பிள்ளைகள் தொடர்பில் அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள நலன்புரிச் சேவைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0379/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இன்று பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பொலிஸ் ஆளணியினர் அல்லது அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவு ஆளணியினர் ஆகியோரது எண்ணிக்கை என்னவென்பதை தனித்தனியாகவும்,

(ii) அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவினர் வேறுயாருக்காக பணிக்கமர்த்தப்பட்டுள்ளர் என்பதையும்,

(iii) அவ்வாறு அனுமதிக்கப்பட்ட ஆளணியினர் எண்ணிக்கை என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இற்றைவரை பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் தவிர்ந்த ஏனையவர்களுக்காக பணிக்கமர்த்தப்பட்டுள்ள அமைச்சுப் பாதுகாப்புப் பிரவினரின் பட்டியலொன்றை அவர் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) இன்று வரை பொலிஸ் அல்லது அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவினரின் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்கின்ற தோல்வியடைந்த அபேட்சகர்கள், தோல்வியடைந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரது பெயர்களையும்,

(ii) அவர்களுக்காக பணிக்கமர்த்தப்பட்டுள்ள ஆளணியினரின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் எங்கிருந்து பெறப்பட்டனர் என்பதையும்,

(iii) இவ்விதமான வேலைக்கமர்த்தலின் பொழுது பின்பற்றப்பட்ட நடைமுறை என்னவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) உயர்நீதிமன்ற, மேல்நீதிமன்ற, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள பொலிஸ், நீதித்துறைப் பாதுகாப்புப் பிரிவு, அல்லது அமைச்சுப் பாதுகாப்பு பிரிவு ஆளணியினரின் எண்ணிக்கை என்னவென்பதையும் அவர் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0724/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) குருநாகல் மாவட்டத்திலுள்ள சமுர்த்தி கடன் பெறுநர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இக்கடன் வழங்கப்பட்ட வட்டி வீதம் யாதென்பதையும்,

(iii) கடன் வழங்கும் போது கடைப்பிடிக்கப்படும் நடைமுறை யாதென்பதையும்,

(iv) இதுவரை மீட்கப்பட்டுள்ள கடன்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சமுர்த்தி கடன் பெறுநர்களிடமிருந்து கடனை மீள் அறிவடும் போது உத்தியோகத்தர்கள் தான்தோன்றித்தனமாக செயலாற்றுகின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(இ) ஆமெனில், அது சம்பந்தமாக மேற்கொள்ளப்போகும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0782/ '10

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் பிறப்பிலேயே அங்கவீனர்களாகவும் பல்வேறு விபத்துகளாலும் நோய்களாலும் அங்கவீனர்களாகவும் ஆகியுள்ள ஆட்களின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி அங்கவீனர்களுக்காக அரசினால் வழங்கப்படும் நிவாரணச் சேவைகள் யாவையென்பதையும்,

(iii) அப்பணிகளுக்காக அரசு வருடந்தோறும் செலவு செய்யும் பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2011, பெப்புருவரி 22, செவ்வாய்க்கிழமை)

0664/ '10

கௌரவ அநுர திஸாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) ஆரம்ப காலத்தில் நெற் சந்தைப்படுத்தும் சபைக்கு உரித்தாயிருந்த,

(i) களஞ்சிய சாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

(ii) ஒவ்வொரு களஞ்சியசாலையினதும் அமைவிடம் யாதென்பதையும்,

(iii) மேற்படி களஞ்சியசாலைகளின் கொள்ளளவு தனித்தனியாக எவ்வளவு என்பதையும்,

(iv) ஒவ்வொரு களஞ்சியசாலையிலும் பணியாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(v) வாகனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) தற்போது அரசாங்கத்துக்கு உரித்தாயுள்ள,

(i) நெல் களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) நெல் களஞ்சியசாலைளின் அமைவிடங்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு களஞ்சியசாலையினதும் கொள்ளளவு மற்றும் ஊழியர் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்,

(iv) நெல் கொள்வனவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்களின் வகைகள் மற்றும் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) கடந்த 5 வருடங்களில்,

(i) சிறுபோகம், பெரும்போகங்களின் போது ஒவ்வொரு களஞ்சியசாலையினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு தனித்தனியே யாதென்பதையும்,

(ii) நெல்லுக்கான கொள்வனவு விலை எவ்வளவென்பதையும்,

(iii) நெல்லுக்கான விற்பனை விலை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்கூறிய காலத்தினுள் கொள்வனவு செய்யப்பட்ட நெல் கையிலிருப்பில் அழிவடைந்த அளவு எவ்வளவென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0665/ '10

கௌரவ அநுர திஸாநாயக்க,— கமத் தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கடந்த 10 வருடங்களில் சிறுபோகம் மற்றும் பெரும் போகங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும்,

(i) விவசாயப் பயிர்கள் பயிரிடப்பட்ட ஹெக்டெயார் அளவு,

(ii) ஒவ்வொரு ஏற்றுமதிப்பயிரும் பயிரிடப்பட்ட ஹெக்டெயார் அளவு,

(iii) ஏற்றுமதிப் பயிர் பயிரிடப்பட்ட ஹெக்டெயார் அளவு

யாதென்பதைத் தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கடந்த 10 வருடங்களில் ஒவ்வொரு வருடத்திலும்,

(i) பயிரிடப்பட்ட ஒவ்வொரு விவசாயப் பயிர்களிலிருந்தும் பெறப்பட்ட விளைச்சல் போகங்களுக்கிணங்க தனித்தனியாக எவ்வளவு,

(ii) ஒவ்வோர் ஏற்றுமதிப் பயிரினதும் வருடாந்த விளைச்சல் மற்றும் அப்பயிர்களின் ஏற்றுமதிப் பெறுமதி தனித்தனியாக எவ்வளவு,

(iii) அப்பயிர்களின் மொத்த ஏற்றுமதிப் பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல். ஏன்?

0666/ ’10

கௌரவ அநுர திஸாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 1977ஆம் ஆண்டில் இருந்த அரச கமத்தொழில் பண்ணைகளின் எண்ணிக்கை யாதென்பதை அவர் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு பண்ணையினதும்,

(i) பெயர், பண்ணை அமைக்கப்பட்ட நோக்கம் மற்றும் ஆற்றப்பட்ட பணிகள் யாதென்பதையும்,

(ii) அதன் பரப்பளவு மற்றும் பணிபுரிந்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) இலாபம் ஈட்டிய வருடம், பெற்ற இலாபம், இலாபமீட்டிய துறைகள் மற்றும் இலாபம் ஈட்டிய ஒரு சில வருடங்களில் உற்பத்தித் தொகைகள் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி பண்ணைகளில் தனியார்த் துறையினருக்கு ஒப்படைக்கப்பட்ட பண்ணைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவை ஒப்படைக்கப்பட்ட நபர்கள் மற்றும் தற்போதைய உரிமையாளர்கள் யாவர் என்பதையும்,

(iii) அவ்வாறு இவை ஒப்படைக்கப்பட்ட திகதி, விலை விபரம் மற்றும் ஒப்படைப்பின் அடிப்படை நிபந்தனைகள் யாவையென்பதையும்,

(iv) தற்போது தனியார் பண்ணைகளில் ஆற்றப்படும் பணிகள் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) தற்போது அரசுக்குச் சொந்தமான பண்ணைகளில்,

(i) ஆற்றப்படும் பணிகள் யாதென்பதையும்,

(ii) ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) கடந்த ஐந்து வருடங்களில் பெற்ற இலாபம் அல்லது நட்டத்தின் தொகை யாதென்பதையும்,

(iv) கடந்த வருடத்தினுள் உற்பத்தி செய்யப்பட்ட ஒவ்வொரு துறையினதும் உற்பத்திப் பெறுமதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0667/ ’10

கௌரவ அநுர திஸாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) தற்போது மத்திய அரசாங்கத்தில் மற்றும் மாகாண சபைகளில் தாபிக்கப்பட்டுள்ள கமத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் (திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகாரசபைகள்) யாவையென்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும்

(i) தாபிக்கப்பட்ட திகதிகள், தாபிக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் மற்றும் மேற்கோள்ளப்படுகின்ற பணிகள் யாவையென்பதையும்,

(ii) உருவாக்கப்பட்டுள்ள பதவிகள் மற்றும் அப்பதவிகளில் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாவையென்பதையும்,

(iii) பிரதேச மட்டத்தில் செயற்படுகின்ற விதம் மற்றும் அவற்றின் ஒழுங்கமைப்பு ரீதியிலான கட்டமைப்பு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது கமத்தொழில் சம்பந்தமாக தாபிக்கப்பட்டுள்ள அரச சார்பற்ற அமைப்புகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு அமைப்பையும் தாபித்தவர்கள் மற்றும் அவற்றுக்கு நிதி வழங்குகின்றவர்கள் யாரென்பதையும்,

(iii) இற்றை வரை மேற்படி அமைப்புகளால் செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை யாதென்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வொரு அமைப்பிலும் இருக்கின்ற ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் என்?

0669/ '10

கௌரவ அநுர திஸாநாயக்க,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையிலுள்ள பாரிய நீர்ப்பாசன திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசன திட்டமும் அமைந்துள்ள தொகுதி யாதென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசன திட்டத்தின் பெயர் மற்றும் அவற்றின் நீர் மூலங்கள் யாவையென்பதையும்,

(iv) நீரேந்து பிரதேசத்தின் அளவு மற்றும் இவற்றின் கொள்ளளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசனத் திட்டமும்,

(i) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு,

(ii) நிறைவுசெய்யப்பட்ட ஆண்டு,

(iii) மக்கள் உரிமைக்காகக் கையளிக்கப்பட்ட திகதி,

(iv) பூர்த்திசெய்வதற்கு செலவாகிய பணத்தொகை

யாதென்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) கடந்த 20 வருடங்களில் மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசன திட்டம் சார்பிலும்,

(i) மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்,

(ii) நிதி ஒதுக்கப்பட்ட ஆண்டுகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iii) நிறைவேற்றப்பட்ட பணிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசன திட்டத்திற்கமைவாக,

(i) பயிரிடப்பட்டுள்ள காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) கடந்த பத்தாண்டுகளில் சிறு போகம் மற்றும் பெரும் போகங்களின் போது பயிரப்பட்ட காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(iii) குடியேற்றப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0776/ '10

கௌரவ அஜித் குமார,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ருஹுனு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் தர்ஷன விக்கிரமசிங்க என்பவருக்கெதிராக கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்திலும் அவர் குற்றமற்றவராகக் காணப்பட்டபோதிலும் பல்கலைக் கழகப் பேரவையின் தீர்மானம் ஒன்றின் பிரகாரம் அவர் சேவையிலிருந்து நீக்கப்பட்டார் என்பதையும்,

(ii) மேலே சொல்லப்பட்ட தீர்மானம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் டாக்டர் விக்கிரமசங்கவினால் ஆட்சேபிக்கப்பட்டு மேலே சொல்லப்பட்ட தீர்மானத்திற்கு தடை ஆணை வழங்கப்பட்டதையும்,

(iii) தனக்கு எதிராக ஒரு வன்மமான முறைப்பாட்டை மேற்கொண்டு அதன் விளைவாகத் தனது தொழிலை இழக்கச் செய்த அதே பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் மிரானி வீரசூரிய என்பவரினால் தனக்கு ஏற்படுத்தப்பட்ட சேதத்துக்காக மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தில் டாக்டர் விக்கிரமசிங்க தனிப்பட்ட வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார் என்பதையும்,

(iv) இந்தத் தனிப்பட்ட வழக்குக்குக்கூட பேராசிரியர் வீரசூரிய அமர்த்தியுள்ள சட்டத்தரணிகளுக்கு பல்கலைக் கழகம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ருஹுனு பல்கலைக் கழக அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட மேலே சொல்லப்பட்ட நடவடிக்கைகள் நியாயப்படுத்தக்கூடியனவா என்பதையும்,

(ii) மேலே சொல்லப்பட்ட விடயத்தை விசாரித்து அத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு பணிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0777/ '10

கௌரவ அஜித் குமார,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2004, 2005, 2006, 2007, 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் இலங்கை ருஹுனு பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்திற்குக் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு ஆராய்ச்சி மானியங்களின் பெறுமதி மற்றும் அவற்றின் மூலங்கள் ஆகியவற்றை வெவ்வேறாகவும்,

(ii) மேலே சொல்லப்பட்ட மருத்துவ பீடத்தினால் அந்த நிதிகள் பயன்படுத்தப்பட்ட விதத்தையும்,

(iii) அந்த மானியங்கள் கிடைக்கப் பெற்றமை பற்றியும் அந்த மானியங்களைப் பயன்படுத்தி மேற்கொண்ட ஆராய்ச்சியின் கண்டறிதல்கள் பற்றியும் மருத்துவ பீட மருத்துவச் சபை, செனற் மற்றும் கல்விசார் அதிகார சபைக்குத் தெரிவிக்கப்பட்டதா என்பதையும்,

(iv) இன்றேல், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்காமைக்கான காரணங்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) 1978ஆம் ஆண்டின் 160ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் பிரிவு 99(1) மற்றும் அரசாங்க நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் இந்நிதிகள் பல்கலைக்கழகக் கணக்குகளில் இடப்பட்டனவா என்பதையும்,

(ii) அவ்வாறின்றேல், கணக்கில் இடப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2011, பெப்புருவரி 23, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0324/ ‘10

கெரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) “மத்தட்ட தித்த” நிகழ்ச்சித் திட்டத்தில் சிகரட் பாவனையை இல்லாதொழித்தல் உள்ளடக்கப்பட்டிருக்கின்றதா என்பதையும்,

(ii) கடந்த ஐந்து வருடங்களில் இலங்கையில் சிகரட் மற்றும் பீ(B)டி ஆகியவற்றின் பாவனையை வருடாவாரியாகவும்.,

(iii) கடந்த ஆறு வருடங்களாக உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட சிகரட்டுகள் மற்றும் பீடி ஆகியவற்றின் தொகையை வருடவாரியாகவும்,

(iv) கடந்த ஆறு வருடங்களில் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட சிகரட்டுகளின் தொகையையும்,

(v) கடந்த ஆறு வருடங்களாக சிகரட்டுகள், பீடி ஆகியவற்றின் உள்ளூர் உற்பத்தி மற்றும் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட வரிகள் மூலம் பெறப்பட்ட வருமானத்தை வருடவாரியாகவும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0549/ ’10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த இரளிதுலாய் பாலத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளனவா என்பதையும்,

(ii) இன்றேல், அதன் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iii) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iv) இன்றளவில் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்கான நிதியை முதலீடு செய்துள்ள நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) இதற்கு வெளிநாட்டு உதவி கிடைத்திருப்பின், உதவி வழங்கிய நாடு மற்றும் வழங்கிய தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) அந்த நிறுவனத்திற்கு எந்த அடிப்படையில் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டனவென்பதையும்,

(iii) நிர்மாணப்பணிகளை ஒப்படைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா வென்பதையும்,

(iv) அவ்வாறாயின், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0559/ '10

கௌரவ அஜித் குமார,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கடந்த சனாதிபதித் தேர்தலின்போது முன்வைக்கப்பட்ட மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கின் கீழ் "ஓய்வுகால வாழ்க்கைக்கான உறுதுணை" திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றவர்களுக்கு நிவாரணமாக 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு 2006 ஆம் ஆண்டு சம்பள முறைக்கு இசைவுறும் விதத்தில் ஓய்வூதியத்தைத் தயாரித்து அடுத்த வரவு செலவுத் திட்டத்திலிருந்து (2010) நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதியளிக்கப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2010 வரவு செலவு திட்டத்தில் 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு 2006 ஆம் ஆண்டு சம்பள முறைக்கு இசைவுறும் விதத்தில் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி நிவாரணம் 2010, வரவு செலவு திட்டத்தின் மூலம் வழங்கப்படாதிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்,

(iv) குறித்த ஓய்வூதிய அதிகரிப்பை பெற்றுக்கொடுக்கும் திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0570/ '10

கௌரவ கரு ஜயசூரிய,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ரத்தொழுகம வீடமைப்புத் தொகுதியில் எஞ்சியுள்ள காணித்துண்டுகளை விற்பனை செய்ய வீடமைப்பு அதிகாரசபையினால் அமுலாக்கப்பட்ட திட்டமொன்று அங்குள்ள வீடு பெறுநர்களால் மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களிடம் செய்த முறைப்பாட்டிற்கிணங்க இடைநிறுத்தப்பட்டதென்பதையும்,

(ii) இது சம்பந்தமாக சனாதிபதி புலமைப்பிரிவு மேற்கொண்ட விசாரணையின் பரிந்துரையை சனாதிபதி செயலாளர் வீடமைப்பு, அபிவிருத்தி அதிகார சபையின் அப்போதைய தலைவருக்கும், வீடமைப்பு, நிர்மானத்துறை அமைச்சின் செயலாளருக்கும் தொர்பு இல. SP/4/2/4/2/1 மற்றும் 2006.02.28 ஆம் திகதிய கடித மூலமாக அறிவித்துள்ளாரென்பதையும்,

(iii) அக்கடிதத்தில் (சுருக்கமாக) "எஞ்சியுள்ள சிறிய காணித்துண்டுகளை கிட்டத்தட்ட 23 வருடகாலமாக அந்த வீடுகளில் வசிப்பவர்கள் அனுபவித்து வந்துள்ளமையால் அவர்களுக்கு விற்பதன் மூலமாக கையளிக்க மேன்மைதங்கிய சனாதிபதியவர்களின் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. சனாதிபதியின் புலனாய்வுத் துறையின் பரிந்துரைக்கிணங்க ரத்தொழுகம வீடமைப்புத் தொகுதியைச் சுற்றி செல்வதற்குள்ள வீதியை காணித்துண்டு 1820 இலிருந்து வேறாக்குவதும் காணித்துண்டு 1819ஐ அண்டிய வீடகளில் வசிப்போருக்கு விற்பனை செய்வதன் மூலமாக கையளிப்பதும் பொருத்தமானதென அறிவிக்கிறேன்." எனக் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேன்மைதங்கிய சனாதிபதியவர்களின் மேற்படி பணிப்புரையை தாமதமின்றி நிறைவேற்ற அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0682/ '10

கௌரவ அ. விநாயகமூர்த்தி,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) கிளிநொச்சி உட்பட வடக்கில் பாதுகாப்புப் படையினர் தங்கியிருக்கும் தனியார் வீடுகள் மற்றும் நிறுவனங்களின் எண்ணிக்கையை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அவ்விடங்கள் எப்போது உண்மையான உரிமையாளர்களுக்கு மீள ஒப்படைக்கப்படும் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0706/ '10

கௌரவ கயந்த கருணாதிலக,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும், 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான ஒவ்வோர் ஆண்டிலும் யூன் மாதம் 30ஆம் திகதியன்று உரித்துடையோராயிருந்த சமுர்த்தி பெறுநர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(ii) அவ்வாறு உரித்துடையோருக்குச் செலுத்தப்பட்ட பணத் தொகைகள், இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(iii) 2005, 2006, 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் சமுர்த்தி பெறுநர்களுக்கு ஆண்டுதோறும் செலுத்தப்பட்ட மொத்தப் பணத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வோர் ஆண்டிலும் சமுர்த்தி பெறுநராக விளங்கிய எனினும், பின்னர் நீக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(ii) அவ்வாறு நீக்கப்பட்டதற்கான அடிப்படை யாதென்பதையும்,

(iii) மேற்படி கால எல்லையில் புதிதாகச் சேர்ந்த சமுர்த்தி பெறுநர்கள் இருப்பார்களாயின் இவர்களுக்குச் செலுத்தப்பட்ட பணத் தொகை மற்றும் இவர்களின் முகவரிகள் ஆண்டுதோறும் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0707/ '10

கௌரவ துனேஷ் கங்கந்த,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வடக்கு கிழக்கு புனர்வாழ்வு அமைப்பு (NERDO - North East Rehabilitation and Development Organization) என்ற அமைப்பொன்று இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், பதிவு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்,

(iii) அவ்வமைப்பு தாபிக்கப்பட்ட நோக்கங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி அமைப்பின் அலுவலகம் அமைந்துள்ள இடம், அதன் முக்கியஸ்தர்களின் பெயர்கள், பணியாளர்களின் எண்ணிக்கை, இவர்களின் பெயர்கள் மற்றும் விலாசங்கள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0848/ '10

கௌரவ விக்டர் அந்தனீ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) புத்தளம் மாவட்டடத்திலுள்ள ஒரேயொரு விவசாய பொருளாதார மத்திய நிலையம் கல்பிட்டி பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தின் நொரச்சோலைப் பிரதேசத்தில் அமைந்துள்ளதென்பதையும்,

(ii) கல்பிட்டி பிரதேச சபை ஆளுகைப் பிரதேசம் செழிப்பற்ற நீண்ட மணல் நிலப்பரப்பினால் மூடப்பட்டுள்ளதென்பதையும்,

(iii) மேற்படி பிரதேசத்தின் விவசாயிகள் யூரியா உட்பட இரசாயன பசளைகளை இட்டு செழிப்பாக்கிக் கொள்கின்ற மேற்படி செழிப்பற்ற மணல் நிலப்பரப்பில் இலங்கைக்குத் தேவையான சின்ன வெங்காயம்,மரக்கறி, பழங்களுக்கான தேவையில் சுமார் 1/3 ஐ மிக வெற்றிகரமாக உற்பத்தி செய்கின்றனர் என்பதையும்,

(iv) ஆயினும், நெற் செய்கைக்கான யூரியா உட்பட ஏனைய பசளைகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற மானியம் கல்பிட்டியில் மேட்டுநிலப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை என்பதையும்

அவர் அறிவாரா ?

(ஆ) நெற் செய்கைக்காக வழங்கப்படுகின்ற உர மானியத்தை செழிப்பற்ற நிலத்துடன் போராடுகின்ற மிகப் பின்தங்கிய கல்பிட்டி பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தின் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கும் வழங்குவது பொருத்தமாகுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், மேற்படி உர மானியத்தை கல்பிட்டி விவசாயிகளுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0877/ '10

கௌரவ அஜித் பி. பெரேரா,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வீரவில சர்வதேச விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 2007, 2008, 2009, 2010 ஆகிய வருடங்களில் செலவிட்ப்பட்ட தொகை வருடாந்தம் தனித்தனியே எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றதா என்பதையும்,

(iii) இன்றேல், இதற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி கருத்திட்டம் கைவிடப்பட்டதால் இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் எவ்வளவென்பதையும்,

(v) மேற்படி நட்டம் ஏற்படுவதற்கு பொறுப்பானவர் அல்லது பொறுப்பானவர்கள் யார் என்பதையும்,

(vi) இவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0886/ '10

கௌரவ விஜித ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கம்பஹா மாவட்டடத்தின் பபிலியவல, பல்லேகமவில் அமைந்துள்ள, மே.மா/கம்/ஆனந்தா வித்தியாலயத்தில், 2011 ஆம் ஆண்டின் முதலாம் தரத்திற்கு பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வதற்காக நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்,

(ii) தகைமை பெற்ற மற்றும் தகைமை பெறாத விண்ணப்பதாரிகளினதும் பெயர், விலாசம், உரிய பிரிவு மற்றும் புள்ளிகள் யாவை என்பதை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) அமைச்சின் தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம், விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவு செய்யப்பட்ட வாக்காளர் பெயர் பட்டியல்களின் தகவல்களை உறுதி செய்வதற்கு கிராம உத்தியோகத்தரின் கடிதம் தேவைப்படுகின்றதா என்பதையும்,

(ii) கிராம உத்தியோகத்தரின் கடிதம் காணப்படாமையினால் மட்டும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய உறுதிப்படுத்தும் ஆவணங்களைப் பரிசீலனை செய்வதை நிராகரிப்பதற்கு நேர்முகப் பரீட்சைக் குழுவுக்கு இயலுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கிராம உத்தியோகத்தரின் கடிதத்தைக் கொண்டிராத சில விண்ணப்பதாரிகள், மீண்டும் நேர்முகப் பரீட்சைக்காக வேறொரு தினத்தில் அழைக்கப்பட்டிருந்தனர் என்பதையும்,

(ii) இது குறித்து முறையான அறிவித்தல் செய்யப்படாமையினால், விண்ணப்பதாரியொருவர் அநீதிக்கு உள்ளானார் என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஈ) (i) இதன்படி, அநீதிக்கு உள்ளான அவ்விண்ணப்பதாரிக்கு, நீதியை நிறைவேற்றி வைப்பதற்கும்,

(ii) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும்

அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0888/ '10

கௌரவ வசந்த அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மாத்தளை மாவட்டத்தில் வில்கமுவ பேரகனத்த கிராம அலுவலர் பிரிவிலுள்ள கங்கே யாய காணியின் 42 காணித்துண்டுகள் 2002 ஆம் ஆண்டு காணிக் கச்சேரி நடாத்தப்பட்டு காணியற்ற விவசாயிகளுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) பிற்காலத்தில் இக்காணி பெற்றவர்களை விரட்டிவிட்டு வேறு நபர்கள் இக்காணித்துண்டுகளை பலாத்காரமாகக் கைப்பற்றியுள்ளனர் என்பதையும்,

(iii) இவ்வாறு விரட்டப்பட்ட காணி பெற்றவர்கள் இது தொடர்பாக முறைப்பாடு செய்தபோதிலும் இதுவரை இது பற்றிய விசாரணையேதும் நடாத்தப்படவில்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) 2002 ஆம் ஆண்டு காணி பகிர்ந்தளிக்கப்பட்டதற்கமைய காணி பெற்றவர்களின் பெயர்ப்பட்டியலை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) தமது காணிகளிலிருந்து விரட்டப்பட்ட காணி பெற்றுக்கொண்டவர்களினால் செய்யப்பட்ட முறைப்பாட்டை விசாரித்து இவர்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தி மீண்டும் குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், என்?

0584/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி ,திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கடந்த நான்கு வருடங்களாக பல்தரப்பு முகவர்களிடமிருந்தும் நட்பு நாடுகளிடமிருந்தும் இருதரப்பு அடிப்படையில் பெறப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கான மேலதிக சலுகை காலத்திற்கு வழங்கப்பட்ட கால நீடிப்பையும் திருப்பிச் செலுத்தப்பட்ட அளவையும்,

(ii) அவ்வசதிகள் எப்போது வழங்கப்பட்டன என்பதையும்,

(iii) எந்நோக்கங்களுக்காகஅது வழங்கப்பட்டதென்பதையும்,

(iv) மேற்குறிப்பிடப்பட்ட கடனிற்காக முன்னெடுப்புக் கட்டணம், கடப்பாட்டுககட்டணம், முகாமைத்துவ அல்லது நிர்வாகக் கட்டணம், காப்புறுதிக் கட்டணம், அல்லது பல்வேறு பெயர்களில் வேறு ஏதாவது செலவுகள் இருந்தனவா என்பதையும்,

(v) இவை ஒரே தடவையில் செலுத்ததப்பட வேண்டியனவாக இருந்தனவா அல்லது வருடாந்தம் செலுத்ததப்பட வேண்டியனவாக இருந்தனவா என்பதையும்,

(vi) ஒரு செலவுக் காரணி என்ற ரீதியில் நாட்டின் மீது தாக்கம் செலுத்தக்கூடிய வருடாந்தம் செலுத்தப்படவேண்டிய மேலேயுள்ள செலவுகளின் மொத்தத் தொகையினையும்

அவர் சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0732/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2006 ஆம் ஆண்டு முதல் இதுவரை வெளிநாடுகளில் மரணமடைந்த வெளிநாடு சென்ற ஊழியர்களின் எண்ணிக்கை மாதாந்த அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(ii) அந்த மரணங்களுக்கான காரணங்கள் எவை என்பதையும்,

(iii) அவ்வாறு மரணித்தவர்களில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட பிரதேசங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) பிரேதங்களைக் கொண்டுவர முடியாத நிலையேற்பட்டிருப்பின் அதற்கான காரணங்கள் எவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி மரணித்தவர்களுக்காக இன்றுவரை இழப்பீடு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) மரணித்தவர்களுக்காக இழப்பீடு வழங்கப்படாத சந்தர்ப்பங்கள் இருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0585/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 1970 ஆம் ஆண்டு முதல் 1980 வரை, 1980 ஆம் ஆண்டு முதல் 1990 வரை, 1990 ஆம் ஆண்டு முதல் 2000 வரையிலான காலப்பகுதிகளில் பெறப்பட்ட கடன்களை வெவ்வேறாகவும்,

(ii) அவை பல்தரப்புக் கடன்களா இருதரப்புக் கடன்களா என்பதையும்,

(iii) மேற்படி கடன்களுக்கு உரித்தான வருடாந்த வட்டி வீதத்தையும், செலுத்தப்பட்ட வட்டியையும்,

(iv) அக்கடன்கள் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளனவா அல்லது இல்லையா என்பதையும்,

(v) மேற்படி கடன்கள் மீது வருடமொன்றுக்கு செலுத்தப்பட மொத்த வட்டியையும் முதலையும்,

(vi) இன்றுவரை பெறப்பட்ட கடன்களுக்காக 2015 முதல் 2020 வரையான (ஐந்து வருட) காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய வட்டியையும் முதலையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0833/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடமையில் அமர்த்தப்பட்டுள்ள குடிவரவு, குடியகல்வு திணைக்கள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) விமான நிலையத்தில் கடமைபுரியும் மேற்படி ஊழியர்கள் பூர்த்தி செய்யவேண்டியுள்ள தகைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கடமைகளின் பொருட்டு மேற்படி திணைக்களத்தைச் சாராத வெளி ஆட்கள் அமர்த்தப்பட்டுள்ளார்களா என்பதையும்,

(ii) ஆமெனில், இவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iii) மேற்படி ஆட்களின் தகைமைகள் யாவையென்பதையும்,

(iv) அவ்வாறானவர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2011, பெப்புருவரி 24, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

0376/ ‘10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பால்மா, எரிவாயு, சீனி, பருப்பு, வெங்காயம், உருளைக்கிழங்கு, அரிசி, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், பெற்றோலியம் ஆகிய இறக்குமதிப் பொருட்கள் மீது விதிக்கப்படும் சுங்கவரி மற்றும் ஏனைய சகல விதமான வரிகளையும்,

(ii) கடந்த 10 வருடங்களாக இறக்குமதி செய்யப்பட்ட மேற்படி பொருட்களின் அளவையும்,

(iii) கடந்த 5 வருடங்களாக வரி விதிப்பின் மூலம் ஈட்டப்பட்ட வருமானத்தையும்,

(iv) மேற்படி பொருட்களில் ஏதாவது கடந்த 5 வருடங்களில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டிருப்பின் அவற்றின் அளவை வருடாந்த அடிப்படையிலும்,

(v) கடந்த 5 வருடங்களுக்கான மேற்படி பொருட்களின் வருடாந்த நுகர்வையும்

தனித்தனியாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0678/ ’10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாந்தோட்டை சூரியவெவ கிரிக்கெட் விளையாட்டு மைதானம் நிர்மாணிக்கப்படுகின்ற காணியை அரசாங்கம் குத்தகை அடிப்படையில் அல்லது வேறு முறையில் வெளித் தரப்புக்கு ஒப்படைத்துள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறு யாருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(iii) அக்காணி ஒப்படைக்கப்பட்டுள்ள பணத்தொகை, ஒப்படைக்கப்படுள்ள வருடம் மற்றும் காணியின் பரப்பளவு யாதென்பதையும்,

(iv) இந்த விளையாட்டு மைதானம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் அதன் உரிமை ஒப்படைக்கப்படும் தரப்பினர் யாவர் என்பதையும்,

(v) ஒப்படைக்கப்படும் கால எல்லை மற்றும் பணத் தொகை எவ்வளவென்பதையும்,

(vi) இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்படுவாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்குச் செலவாகும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) இப்பணத் தொகை அரசாங்கத்தினால் அல்லது அரச நிறுவனமொன்றினால் செலவிடப்படுகின்றதா அல்லது கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் அல்லது வேறு நிறுவனத்தினால் செலவிடப்படுகின்றதா என்பதையும்,

(iii) ஆமெனில் ஒவ்வொரு தரப்பினராலும் செலவிடப்பட்டுள்ள தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்த விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்கும் அதன் கடடிட கலைக்கும் ஆலோசனைகளை வழங்குவது யாவர் என்பதையும்,

(ii) விளையாட்டு மைதானம் , விளையாட்டு அரங்கு, இராப்பகல் மின் குமிழ்கள் மற்றும் வருடாந்த பராமரிப்பு என்பவற்றுக்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்படும் பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0705/ ‘10

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ஐக்கயி நாடுகள் அமைப்புடன் இணைந்த, இலங்கையில் இயங்கி வருகின்ற அமைப்புகள் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு அமைப்புக்கும், நிறுவனத்துக்கும் கையளிக்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்புக்கள் தனித்தனியே யாவையென்பதையும்,

(iii) அவை அமுல்படுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அரசாங்கத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) மேற்படி அமைப்புக்களினதும், நிறுவனங்களினதும் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக அரசாங்கத்திடம் உள்ள வேலைத்திட்டம் என்னவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) 2005 ஆம் ஆண்டு முதல் இன்று வரை மேற்படி ஒவ்வொரு அமைப்புக்கும், நிறுவனத்திற்கும் கிடைத்துள்ள உதவிப் பணத்தொகைகள் தனித்தனியே எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0890/ ’10

கௌரவ ஹரின் பெர்னாந்து,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) யானை மனித மோதலை குறைப்பதற்காக மின்வேலிகளை அமைக்கின்றபோது அவை உரிய தரத்தில் நடைபெறுகின்றதா என்பதையும்,

(ii) பதுளை மாவட்டத்தில் ரிதீமாலியத்த, மஹியங்கனை, கந்தகெட்டிய, மீகஹகிவுல, ஊவா பரணகம மற்றும் ஹல்தும்முல்ல ஆகிய பிரதேசங்களில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மின்வேலிகளை அமைத்தல் எப்போது ஆரம்பிக்கப்பட்டு எப்போது முடிவடையும் என்பதையும்,

(iii) மேற்படி மின்வேலிகளை அமைப்பதில் தாமதம் ஏற்படுமா என்பதையும்,

(iv) ஆமெனில், அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) காட்டு யானைகளின் தாக்குதல் காரணமாக ஏற்பட்டுள்ள நட்டங்களுக்கு நட்டஈடு செலுத்துவதில் தாமதம் ஏற்படுகின்றதென்பதையும்,

(ii) அது சம்பந்தமாக தற்போது வழங்கப்படும் நட்டஈட்டுத் தொகை போதியதாக இல்லையென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், இந்த நட்டஈடு செலுத்துவதை துரிதப்படுத்துவதற்கும் நட்டஈட்டுத் தொகையை அதிகரிப்பதற்கும் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை துரிதமாக நடைமுறைப்படுத்துவாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0899/ '10

கௌரவ காமினி ஜயவிக்ரம பெரேரா,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) மது அருந்தி நோய்வாய்ப்பட்ட ஒருவரை அரசாங்க வைத்தியசாலைக்கு அனுமதிக்கும் போது பணம் அறவிடப்படுகின்றதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) ஆயுர்வேத மருத்துவ முறைகளில் மதுசாரம் கலந்த அரிஷ்ட வகைகள் மற்றும் கஞ்சா கலந்த மருந்து வகைகள் சகிச்சையளிப்பதற்காக பயன்படுத்தப்படுவதுடன், நீண்டகாலமாக அவ்வாறான சிகிச்சைகளை பெறுவதன் காரணமாகவும் மதுபானத்தை உபயோகிப்பதனால் ஏற்படக்கூடிய "சிரோஸிஸ்" என்றழைக்கப்படுகின்ற நோய் நிலை ஏற்படுமென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) எவரேனும் ஒருவருக்கு "சிரோஸிஸ்" நோய் ஏற்பட்டிருப்பது மதுபானம் அருந்தியதனாலா அல்லது மேற்படி ஆயுர்வேத சிகிச்சை முறைகளினாலா என்பதை தனித்தனியே இனங்காண்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையியலொன்று உள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் அந்த முறையியல் என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0911/ '10

கௌரவ அஜித் பி. பெரேரா,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2010 செத்தெம்பர் மாதம் தென்கொரியாவில் இடம்பெற்ற சம்பியன்ஸ் லீக் 20 — 20 கிரிக்கெட் போட்டியில் இலங்கையை பிரதிநிதிப்படுத்திய "வயம்ப" அணிக்கு அனுசரணை வழங்கியது Musli Power X – tra, எனும் வணிகப் பெயரைக் கொண்ட ஒரு நிறுவனமா என்பதையும் ,

(ii) அந்த நிறுவனம் யாது என்பதையும்,

(iii) மேற்படி நிறுவனம் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு செலுத்திய பணத்தொகை யாது என்பதையும்

அவர் இச்சைபக்கு அறிவிப்பாரா?

(ஆ) Musli Power X – tra வணிகப் பெயரின் கீழ் விற்பனை செய்யப்படுவது பாலியல் உணர்ச்சியற்ற தூண்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் ஓர் உற்பத்தியா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அவ்வாறாயின் அந்த உற்பத்தியோடு தொடர்புடைய இலச்சினையை "வயம்ப" கிரிக்கெட் அணியின் போட்டி நிகழ்வுகளின் மத்தியில் பிரச்சாரம் செய்தனை மேற்படி விளையாட்டு வீரர்களினதும் நாட்டினதும் நற்பெயருக்கு உகந்ததல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) மேற்படி போட்டிக்கான அனுசரணையாளர்களைத் தேர்ந்தெடுக்கையில், பொறுப்பின்றிச் செயற்பட உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0917/ '10

கௌரவ ரஜீவ விஜேசிங்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) தலைமைத்துவம் மற்றும் ஜனநாயகத்துக்கான நிறுவகம் என அழைக்கப்படும் தாபனத்தை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட நிறுவகம் எவ்வாறு எப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டது என்பதையும்,

(ii) அந்நிறுவனத்தின் பணிப்பாளர்களது பெயர்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இந்நிறுவகம் தொடர்பாக கடந்த பத்து வருடங்களுக்கான

(i) நிதிவழங்கல் மூலங்களையும்,

(ii) நிதிவழங்கலின் நோக்கத்தையும்,

(iii) கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு நிதித்தொகைகள் ஏதும் இருப்பின் அவற்றையும்,

(iv) வெளிநாட்டு மூலங்களின் நிதி வழங்குதல் மத்திய வங்கி ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக உள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) எந்தவொரு அரசியற் கட்சிக்கும் இந்நிறுவனத்திற்கும் அல்லது அதன் பணிப்பாளர்கள் எவரேனுக்குமிடையில் ஏதாவது தொடர்புகள் உள்ளனவா என்பதையும்,

(ii) இந்நிறுவனத்திற்குக் கிடைக்கப்பெற்ற ஏதாவது வெளிநாட்டு நிதியானது குறிப்பிட்ட அரசியற் கட்சிக்கு மாற்றப்பட்டதா அல்லது அக்கட்சியினால் உபயோகிக்கப்பட்டதா என்பதையும்,

(iii) இந்நிறுவனத்திற்கும் குறிப்பிட்ட அரசியற் கட்சிக்குமிடையிலுள்ள ஏதவாது தொடர்புகள் பற்றி இந்நிறுவனத்திற்குரிய வெளிநாட்டு நன்கொடையாளர்கள் அறிவார்களா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0594/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கடந்த எட்டு வருடங்களில்,

(i) மூலதனக் கடன் கொடுப்பனவிற்காகவும் அரசாங்க ஊழியர்களக்கு, வழங்கப்பட்ட கடன்களுக்கான வட்டிக்காகவும் செலவு செய்யப்பட்ட தொகையையும்,

(ii) அரசாங்க சேவையில் ஏற்பட்ட ரூபா 25 மில்லியனுக்கு மேற்பட்ட வேறு ஏதேனும் மீண்டும் வரும் செலவினத்தின் பெயரையும் தொகையையும்

வருடவாரியாக அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0713/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுகத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்த "கரதியவர மங்கல்ய" எனும் வைபவத்திற்காக செலவிடப்பட்ட முழுத்தொகை எவ்வளவென்பதையும்,

(ii) குறித்த வைபவத்தின் அரங்க நிகழ்ச்சிக்கு பொறுப்பாகவிருந்த நபர் அல்லது நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(iii) குறித்த பணிகள், நிறுவனமொன்றினால் நிறைவேற்றப்பட்டிருப்பின், அதன் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iv) குறித்த நிறுவனம் அல்லது நபருக்குச் சொலுத்தப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0893/ ’10

கௌரவ ஹரின் பெர்னாந்து,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் பிரதான பாடசாலைகளின் மாணவர்களுக்கு கற்கை லீவு (study leave) வழங்கப்படுகின்றது என்பதையும்,

(ii) க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு தவணை முடிவடையும் போது பாடவிதானத்திற்கு ஏற்ப பாடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் குறிப்பிட்ட பாடங்களுக்கு பொறுப்பான ஆசிரியர்களினால் பாடசாலை நேரங்களில் மேலதிக வகுப்புக்கள் (Tuition Class) நடத்தப்படுகின்றன என்பதையும்,

(iii) அந்த வகுப்புக்களை நடத்துவதற்காக மேற்கூறியவாறு கற்கை லீவு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்கூறியவாறு லீவு வழங்குவதற்கு யாரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவிப்பாரா?

(இ) கற்கை லீவு வழங்கப்பட்டு பாடசாலை நேரங்களில் வகுப்புக்களை நடத்தாமல் அந்தக் கால எல்லைக்குள் பணத்துக்காக வகுப்புக்களை நடத்தும் அரச பாடசாலை ஆசிரியர்கள் தொடர்பாக ஆராய்ந்து அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0914/ ’10

கௌரவ அஜித் பி. பெரேரா,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை கிரிக்கெட் நிறுவனம் சமர்செட் என்டர் டெயின்மன்ட் வென்சர்ஸ் (சிங்கப்பூர்) தனியார் கம்பனியுடன் (Somerset Entertainment Ventures, (Singapore) Rt. Ltd) உடன்படிக்கையொன்றை செய்து கொண்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் மேற்படி உடன்படிக்கை செய்துகொண்ட திகதி மற்றும் அதற்கு ஏற்புடைய விடயங்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி உன்படிக்கையின் பெறுமதி எவ்வளவென்பதையும்,

(iv) அவ்வுடன்படிக்கை சபாபீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்,

(v) இன்றேல், அதற்கான கரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்கூறப்பட்ட கம்பனி,

(i) இலங்கையில் பதிவு செய்யப்பட்டிருப்பின், பதிவிலக்கம் யாதென்பதையும்,

(ii) குறித்த கம்பனி வேறொரு நாட்டில் பதிவுசெய்யப்பட்டிருப்பின், பதிவுசெய்யப்பட்ட நாடு, திகதி மற்றும் இலக்கம் யாதென்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி உடன்படிக்கையுடன் சம்பந்தப்பட்ட அறிவித்தலை இலங்கை கிரிக்கெட் நிறுவுனம் தனது இணையத் தளத்தில் மாத்திரம் விளம்பரம் செய்திருந்ததா என்பதையும்,

(ii) குறித்த அறிவித்தல் விளம்பரம் செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்,

(iii) மேற்படி கம்பனி கிரிக்கெட் விளையாட்டுடன் சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகளை இதற்கு முன்னர் செய்து கொண்டுள்ளதாவென்பதையும்,

(iv) அவ்வாறாயின், அந்தச் சந்தர்ப்பங்கள் யாவையென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0601/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கைக்கு GSP Plus இருப்பதன் நன்மை என்னவென்பதையும்,

(ii) GSP Plus நன்மையை இலங்கை இழந்தது எப்போது என்பதையும்,

(iii) இந்த நன்மையை இழந்ததற்கான காரணங்களையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) GSP Plus ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அது இல்லாது போனது வரைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அதன் கீழ் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் அளவை வருடாந்த அடிப்படையிலும்,

(ii) GSP Plus நன்மையை இழந்ததன் நிமித்தம் பாதிக்கப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்கு அரசாங்கம் எவ்வாறு உதவியளித்தது என்பதையும்,

(iii) GSP Plus யை தற்போது அனுபவிக்கும் நாடுகளின் பெயர்களையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றெல், ஏன்?

0838/10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) சுகாதார அமைச்சு சந்தையில் நிலவும் விலையை விடவும் அதிகூடிய விலையில், அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திடமிருந்து, மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்துள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அதற்கு அனுமதி வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்,

(iii) கொள்வனவு செய்யப்பட்ட மருந்துப் பொருட்களின், சந்தை விலையுடன் ஒப்பிடுகையில், அரசுக்கு ஏற்க நேரிட்ட நட்டம் யாது என்பதையும்,

(iv) கடந்த காலப்பகுதியில், மருந்துப் பொருட்கள் பற்றாக்குறை ஏற்பட்டமைக்கு இந்நிலை ஏதுவாயமைந்ததா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) சுகாதார அமைச்சின், ஒழுங்கான மேற்பார்வை அற்ற நிலையில் நடைபெற்ற இவ் முறைகேடு தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0896/ '10

கௌரவ ஹரின் பெர்னாந்து,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நாகதீவு, மாபாகட நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் குறைவடைகின்ற போது அந்நீர்த்தேக்கங்களின் குளக்கரையில் அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்கள் பயிர்ச்செய்கைகளில் ஈடுபடுகின்றனர் என்பதையும்,

(ii) பல வருடங்களாக குளத்தின் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களில் மேற்படி அத்துமீறிய பயிர்ச்செய்கை நடவடிக்கைகளினால், வண்டல் மண் நிரம்புவதன் காரணமாக மேற்படி நீர்த்தேக்கங்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களினால் மேற்படி நீர்த்தேக்கங்களுக்கு இழைக்கப்படும் தீங்கினை நிறுத்துவதற்காக அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0915/ '10

கௌரவ அஜித் பி. பெரேரா,— விளையாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு இறுதியாக வாக்கெடுப்பின் மூலம் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்ட வருடம் எதுவென்பதையும்,

(ii) அச் சந்தர்ப்பத்தில் அதன் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார் என்பதையும்,

(iii) 2005 மார்ச், 2008 திசெம்பர், 2009 மார்ச், 2010 ஜூலை ஆகிய சந்தர்ப்பங்களில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு இடைக்கால குழுக்களை நியமிப்பதற்கு ஏதுவான காரணங்களை ஒவ்வொரு வருடங்கள் வெவ்வேறாக யாதென்பதையும்,

(iv) அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நியமிக்கப்பட்ட இடைக்காலக் குழு அங்கத்தவர்களின் பெயர்கள் வெவ்வேறாக எவை என்பதையும்,

அவர் இச்சைபயில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 33ஆவது வாசகத்தின் கீழ் இடைக்காலக் குழுக்கள் நியமிக்கப்படும் சந்தர்ப்பங்கள் எவை என்பதையும்,

(ii) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஜனநாயக முறையில் உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கிருந்த தடைகள் எவை என்பதையும்,

(iii) அந்த நிறுவனத்துக்கு ஜனநாயக ரீதியாக உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படாமை, கிரிக்கெட் விளையாட்டின் வளர்ச்சிக்கு தகுந்தல்ல என்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(இ) விளையாட்டுக்கள் சட்டத்தின் 35 ஆவது வாசகத்துக்கமைய விளையாட்டுக் கழகங்களின் வாக்குகளின் மூலம் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்காக எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2011, பெப்புருவரி 25, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0578/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையிலுள்ள பல்கலைக்கழங்களிலிருந்து ஆண்டுதோறும் வெளியேறும் மருத்துவர்களின் எண்ணிக்கையையும்,

(ii) மருத்துவர்களாக பதிவு செய்வதற்கான தகுதியைப் பெறும் வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகளின் எண்ணிக்கையயும்,

(iii) மேற்படி பட்டதாரிகளை மருத்துவர்களாக பதிவுசெய்வதற்கான பரீட்சைகள் இலங்கை மருந்துவச் சங்கத்தால் மேற்கொள்ளப்ப்படுகின்றதா என்தையும், 01.01.2010 முதல் செயற்படும் விதமாக வேறொரு அதிகார சபையிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், அப்புதிய அதிகார சபையின் பெயரையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்நாட்டில் ஆண்டொன்றிற்கு தேவைப்படும் மருத்துவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) ஒரு மருத்துவருக்கு வழங்கப்படும் சராசரிச் சம்பளம் யாதென்பதையும்,

(iii) அவர்களுக்கு வழங்கப்படும் ஏனைய நன்மைகள் யாதென்பதையும்,

(iv) இலங்கையில் தகுதி பெறும் மருத்துவர்கள் விடுமுறையில் செல்வதற்கு வெளிநாடுகளுக்கு செல்வதற்கு அனுமதியளிக்கப்படுகின்றதா என்பதையும்,

(v) அவ்வாறாயின் அவர்கள் விடுமுறையில் இருப்பதற்கு அனுமதிக்கப்படும் கால அளவையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0726/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் கிராதலான வடக்கு வீதி எந்த நிறுவனத்திற்கு உரித்தாகின்றது என்பதையும்,

(ii) மேற்படி வீதிக்கு தார் இடுவதற்காக உரிய நிறுவனத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதிக்கு தார் இடுவதற்காக ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் அல்லது நபர்கள் யாரென்பதையும்,

(ii) அதற்காக ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்,

(iii) குறித்த மதிப்பீட்டுக்கமைய தாரிட வேண்டிய தூரத்தின் அளவும் வீதியின் அகலமும் எவ்வளவென்பதையும்,

(iv) தற்போது தாரிடப்பட்டுள்ள தூரத்தின் அளவு எவ்வளவென்பதையும்,

(v) தாரிட்டு முடித்த திகதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி வீதிக்கு தாரிடுதல் தரநியமங்களுக்கமைய நடைபெறவில்லை என்பதையும், தற்போது பெரும்பாலான இடங்கள் ஆழ்ந்துள்ளன என்பதையும், உரிய தூரத்திற்கு தாரிடப்படவில்லை என்பதையும் அவர் அறிவாரா?

(ஈ) ஆமெனின், தரநியமங்களுக்கு இணங்கியொழுகாத வகையில் நிர்மாணிப்பை மேற்கொண்ட நிறுவனம் அல்லது நபர்கள் தொடர்பில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0887/ '10

கௌரவ வசந்த அலுவிஹாரே,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) தம்புல்ல நகரத்திலும் பொருளாதார மையத்தைச் சார்ந்த பிரதேசத்திலும் அன்றாடம் சேர்கின்ற கழிவுப்பொருட்கள் இனாமலுவ வன ஒதுக்கத்தில் அப்புறப்படுத்தப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இதன் காரணமாக இனாமலுவ ஒதுக்கத்தில் பாரிய சுற்றாடல் சேதம் இடம்பெறுகின்றதென்பதையும்,

(ii) இவ்விதமாக அப்புறப்படுத்தப்படுகின்ற கழிவுப்பொருட்களுடன் உள்ள பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் துண்டுகளை உணவாக உட்கொள்வதனால் இவ்வொதுக்கத்திலுள்ள வனசீவராசிகளின் உயிர்களுக்குப் பாரிய அச்சுறுத்தல் தோன்றியுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இனாமலுவ வன ஒதுக்கத்துக்கு ஏற்படுத்துகின்ற சுற்றாடல் சேதத்தினைத் தடுப்பதற்கும், அங்குள்ள வனசீவராசிகளின் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0889/ '10

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ஆட்சி மீளப் பெறுதல் சட்டத்தின் கீழ் 2000 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை கண்டி மாவட்டத்தில் மினிப்பே பிரதேச செயலாளரால் சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளின் பரப்பளவு, அக்காணிகளின் உரிமையாளர்களது பெயர்கள், முகவரிகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி காலத்தினுள் மீளப் பெறப்பட்டுள்ள பல்லேவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவின் திரு. ஜீ.எம். புஞ்சி பண்டா வசித்து வந்த கட்டடத்துக்கு, கிணற்றுக்கு அல்லது காணிக்கு நெடுஞ்சாலைகள் அமைச்சின் தேசிய நெடுஞ்சாலைகள் துறை சார்ந்த கருத்திட்டத்தின் மூலம் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், நட்டஈடாக வழங்கப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஆ) திரு. புஞ்சிபண்டா போலி ஆவணங்களைத் தயாரித்து மேற்படி காணிக்கு மின்சாரம் பெற்றுக்கொண்டுள்ளார் என்பதையும், மேற்படி காணிக்கு உரிமப்பத்திரமொன்றை பெறுவதற்காக காணிகள் ஆணையாளர் நாயகத்தின் அனுமதிக்கான விண்ணப்பப்படிவமொன்றை சமர்ப்பித்துள்ளாரென்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(இ) (i) காணியை மீளப் பெறுகின்ற போது திரு. புஞ்சி பண்டாவுக்கு வழங்கப்பட்டுள்ள நட்ட ஈட்டுப் பணத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கும்,

(ii) மேற்படி காணிக்கு தவறான முறையில் உரிமப்பத்திரம் வழங்கவும், அவ்வாதனத்திற்கு நட்டஈடு வழங்கவும், மின்சாரம் வழங்கவும் ஆலோசனை வழங்கிய மற்றும் அங்கீகரித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக செயலாற்றுவதற்கும்

நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0891/ '10

கௌரவ ஹரின் பெர்னாந்து,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கெப்பட்டிபொல விசேட பொருளாதார மத்திய நிலையத்தை முறையாக நடைமுறைப்படுத்தாமையினால் வெளிமடை மரக்கறி விவசாயிகள் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர் என்பதையும்,

(ii) தமது மரக்கறிகளுக்கு சிறந்த விலை கிடைக்காமை மற்றும் தமது உற்பத்திகளுக்கு உரிய வகையில் பணம் செலுத்தப்படாமை ஆகிய காரணங்களினால் இப்பொருளாதார மத்திய நிலையமானது விவசாயிகளின் நம்பிக்கை இழக்கப்பெற்றதும், விவசாயிகளை சுரண்டுகின்றதுமான இடமாக மாறியுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த நிலைமையை மாற்றியமைத்து வர்த்தகருக்கும் விவசாயிக்கும் இடையில் சிக்கல்கள் ஏற்படாததும், பொருளாதார மத்திய நிலையம் தொடர்பாக விவசாயிகளுக்கு மத்தியில் நம்பிக்கையை அதிகரிக்கக் கூடியதுமான வேலைத்திட்டமொன்றை வகுத்து நடைமுறைப்படுத்துவதற்கும்,

(ii) இப்பொருளாதார மத்திய நிலையத்திலுள்ள வர்த்தக நிலையங்களை பரிசோதிப்பதற்காக விலைக்கட்டுப்பாட்டு அலகினதும், நிறுவை அளவை அலகினதும் உதவியைப் பெற்று விவசாயிகளின் உற்பத்திகள் சுரண்டப்படுவதைத் தடுக்கின்ற வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கும்

துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0897/ '10

கௌரவ காமினி ஜயவிக்ரம பெரேரா,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கற்பிட்டிக்கு அண்மையில் அமைந்துள்ள ஒரு தீவு, உள்நாட்டு அல்லது வெளிநாட்டுக் கம்பனி ஒன்றுக்கு அல்லது நபர் ஒருவருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், இத்தீவு எவ்வாறான நடவடிக்கைக்காக; எவ்வளவு காலப்பகுதிக்கு; எவ்வளவு தொகைக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இத்தீவு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள கம்பனி அல்லது நபரின் பெயர் யாதென்பதையும்,

(ii) இத்தீவினைக் குத்தகைக்கு விடுதல் தொடர்பான, குத்தகை உடன்படிக்கையை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0602/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கடந்த வருடத்தின் போது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட சகல பங்குகளையும்,

(ii) மேற்குறிப்பிட்ட பங்குகளின் கொள்வனவு விலை மற்றும் தற்போதைய விற்பனை விலை ஆகியவற்றையும்,

(iii) பட்டியலிடப்பட்ட கம்பனிகளிடமிருந்தா அப்பங்குகள் வாங்கப்பட்டன என்பதையும்,

(iv) இல்லையேல், பட்டியலிடப்படாத பங்குகள் ஏன் கொள்வனவு செய்யப்பட்டன என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) பல பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத கம்பனிகளிடமிருந்து சிறிய பங்குரிமைகளை வாங்குவது அரசாங்கத்தின் கொள்கையா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றெல், ஏன்?

0839/10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் பெற்ற இலாபம் அல்லது நட்டம் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(ii) ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் 2010 ஆம் ஆண்டுக்காக இற்றைப்படுத்தப்பட்ட கூட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளதா;

(iii) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை தேர்தல்கள் நடைபெற்ற காலகட்டத்தில் அரசின் தேர்தல் பிரசாரங்களுக்காக தேசிய தொலைக்காட்சி ஒதுக்கிய காலநேரம் மற்றும் அதனுடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி ஆட்சேர்ப்புக்கள் செய்யப்பட்ட பதவிகளுக்கான தகைமைகள் மற்றும் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களின் தகைமைகள் என்ன

என்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0894/ ’10

கௌரவ ஹரின் பெர்னாந்து,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் இயங்கும் இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்துடன் இணைந்த பதிவுசெய்யப்பட்ட இளைஞர் கழகங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி இளைஞர் கழகங்களில் செயல்படும் நிலையிலுள்ள இளைஞர் கழகங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) செயற்படும் நிலையிலுள்ள இளைஞர் கழகங்களின் மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி அங்கத்தவர்களின் எண்ணிக்கையை இற்றைக்கு 5 ஆண்டுகளுக்கு முன் காணப்பட்ட எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாவென்பதையும்,

(v) இன்றேல், குறைந்துள்ளதாவென்பதையும்,

(iv) செயற்படும் நிலையிலுள்ள இளைஞர் கழகங்களில் தற்பொழுதுள்ள மொத்த அங்கத்துவமானது திருப்திகரமான எண்ணிக்கையைக் கொண்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0898/ ’10

கௌரவ காமினி ஜயவிக்ரம பெரேரா,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு உவர் நீர் நிரப்புவதற்காக இடம்பெற்ற வைபவத்துக்கு செலவிடப்பட்ட பணத்தொகை பற்றிய விரிவான அறிக்கையொன்றை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) அவ்வாறு செலவிடப்பட்ட பணத்தொகையை பெற்றுக்கொண்டவர்களின் விபரங்கள் எவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0910/ ’10

கௌரவ வசந்த அலுவிஹாரே,— அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கைப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற தேயிலைத் தோட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) தேயிலை ஏலவிற்பனைகளின் போது மேற்படி தேயிலைத் தோட்டங்களிலிருந்து கழிவுத் தேயிலையாக மாதாந்தம் அகற்றப்படுகின்ற தேயிலையின் அளவு எவ்வளவென்பதையும்,

(iii) 2010 ஓகத்து மாதத்தில் கெலேபொக்கைத் தோட்டம் மற்றும் கல்பிஹில்ல தோட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலைகளிலிருந்து உபயோகத்துக்கு பொருத்தமற்றதெனக் கூறி, தேயிலை ஏல விற்பனைகளின் போது நீக்கப்பட்ட தேயிலை கிராம்களின் அளவுகள் தனித்தனியே எவ்வளவு என்பதையும்,

(iv) இதனால் ஏற்பட்ட மொத்த நட்டம் எவ்வளவு என்பதையும்,

(v) அவ்வாறான நட்டம் ஏற்படுவதற்கு காரணமான விடயங்களை கண்டறிந்து அவ்வாறான நிலை ஏற்படாதிருக்க எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எவை என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

0913/ ‘10

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2010 ஆம் ஆண்டில் கிரிபத்கொட விஹாரமகாதேவி மகளிர் வித்தியாலயத்தில் முதலாம் தரத்திற்கு மாணவியர்களை சேர்த்துக் கொள்வதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குப் பின்னர் பாடசாலைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட, காத்திருப்போர் பட்டியலில் இருந்த மற்றும் காத்திருப்போர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படாத ஒவ்வொரு மாணவியினதும் பெயர், முகவரி மற்றும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாக யாவை என்பதனை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்களின் விசேட கட்டளையின் பேரில் அப்பாடசாலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட 5 மாணவியர்களினதும் பெயர்கள், முகவரிகள், பெற்றுக்கொண்ட புள்ளிகள் மற்றும் அதற்கான விசேட காரணம் யாவையென்பதையும்,

(iii) 2010 ஒற்றோபர் மற்றும் நவெம்பர் மாதங்களில் கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்களின் கட்டளையின் பேரில் கல்வி அமைச்சின் செயலாளரின் சுற்றுநிருபத்திற்கு முற்றிலும் முரணாக பாடசாலை அதிபரால் சேர்த்துக் கொள்ளப்பட்ட நேர்முகப் பரீட்சையில் குறைந்த புள்ளிகள், பெயர்கள், முகவரிகள் மற்றும் இவர்கள் பெற்ற புள்ளிகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) மேற்சொன்னவாறு கல்வி அமைச்சின் செயலாளரின் சற்றுநிரூபத்திற்கும் அமைச்சரின் தார்மீக கொள்கைகளுக்கும் முரணான வகையில் மாணவர்களை பாடசாலைக்கு சேர்த்துக்கொண்ட அமைச்சு உத்தியோகத்தர்களுக்கும் பாடசாலை அதிபருக்கும் எதிராக இலஞ்ச மற்றும் ஊழல் சட்டத்தின் அல்லது வேறேதும் சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன் ?

0645/ ‘10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொழில், தொழில் உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தனியார் துறைக்குரிய குறைந்தபட்ச சம்பளங்கள் எப்போது அதிகரிக்கப்படுமென்பதையும்,

(ii) தனியார் துறை சார்ந்த பல்வேறு துறைகளுக்கு அதிகரிக்கப்படவுள்ள சம்பளத்தொகை இலங்கை ரூபாவில் எவ்வளவு என்பதை வெவ்வேறாகவும்,

(iii) கடந்த பத்து வருடங்களில் தனியார் துறை ஊழியர்களின் சம்பளங்கள் கடைசியாக அதிகரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அரச துறைச் சம்பளம் எப்போது அதிகரிக்கப்படவுள்ளது என்பதையும்,

(ii) அதிகரிக்கப்படவுள்ள தொகையையும்,

(iii) அரசதுறையிலுள்ள பல்வேறு துறைகளுக்குரித்தான குறைந்தபட்ச ஓய்வூதியத்துடனான சம்பளத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0840/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய தவிசாளர் அல்லது நியமிக்கப்பட்டுள்ள உரிய அதிகாரியின் பெயர் மற்றும் தகைமைகள் யாவை என்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான வேஉட ஓடு மற்றும் செங்கல் தொழிற்சாலை அமைந்துள்ள காணியின் உரிமையைக் கொண்டுள்ளவர்கள் யாவரென்பதையும்,

(ii) மேற்படி காணியை விற்பதற்கு அல்லது குத்தகைக்கு விட தீர்மானிக்கப் பட்டுள்ளதாவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) வேஉட ஓடும் மற்றும் செங்கல் தொழிற்சாலையில் வேலை செய்யும் பணியாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) இவர்களுக்கு கிடைக்கவேண்டிய வாழ்க்கைச் செலவு புள்ளி கொடுப்பனவு மற்றும் சேமலாப நிதி, 2010 நவெம்பர் மாதம் வரையிலும் கிடைக்கவில்லையென்பதையும்,

(ii) அவ்வாறாயின் குறித்த கொடுப்பனவுகளை அவர்களுக்கு வழங்கும் திகதி யாதென்பதையும்,

(iii) மேற்படி நிலைமைகளை தவிர்ப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் வேலைத்திட்டம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0895/ '10

கௌரவ ஹரின் பெர்னாந்து,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) உலக மரபுரிமையான போகொடை மகா விஹாரையும் வரலாற்று சிறப்புமிக்க போகொடை மரப்பாலமும் அமைந்துள்ள இடத்துக்கு அருகில் கற்சுரங்மொன்று நடத்தப்பட்டு வருவதையும்,

(ii) அதன் மூலம் மேற்படி புனித பிரதேசத்தை அண்டியதாக பாரிய சூழல் சீர்கேடுகள் ஏற்படுவதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கற்சுரங்கத்தை பேணிக்கொண்டு நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், கலாசார பெறுமதிமிக்க மேற்படி பிரதேசத்தில் இடம்பெறும் சூழல் சீர்கேடுகளுக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் யாவர் என்பதையும்,

(iii) மேற்படி சூழல் சீர்கேட்டை தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?